செ.வெ.எண்: 592　　　　　　　　　　　　　　நாள்: 29.10.2024

# திருநெல்வேலி மாவட்டம்

## வரைவு வாக்காளர் பட்டியலினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியீட்டார்கள்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (29.10.2024) வரைவு வாக்காளர் பட்டியலினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியீட்டார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில், 01.01.2025–ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் (31.12.2006 அன்று வரை பிறந்தவர்கள்), விடுபட்ட வாக்காளர்கள் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவும், வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம், திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் ஆதார் எண் இணைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளவும் ஏதுவாக புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் – 2025 கால அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 29.10.2024 அன்று வெளியிடப்படுகிறது. இதன்படி வாக்காளர் எண்ணிக்கை பின்வருமாறு:–

| வ. எண் | சட்டமன்ற தொகுதி எண் மற்றும் பெயர் | வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | வாக்காளர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்தம் |
| 1 | 224.திருநெல்வேலி | 311 | 145106 | 153046 | 83 | 298235 |
| 2 | 225 அம்பாசமுத்திரம் | 294 | 123439 | 131719 | 8 | 255166 |
| 3 | 226. பாளையங்கோட்டை | 270 | 135348 | 141023 | 27 | 276398 |
| 4 | 227. நாங்குனேரி | 306 | 141885 | 148134 | 13 | 290032 |
| 5 | 228. இராதாபுரம் | 309 | 130726 | 135463 | 24 | 266213 |
| | மொத்தம் | 1490 | 676504 | 709385 | 155 | 1386044 |

29.10.2024 அன்று வெளியிடப்படும் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் ஆதார் எண் இணைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள சிறப்பு சுருக்க முறை திருத்தம் – 2025 பயன்படுத்திக்கொள்ளலாம். சிறப்பு சுருக்கமுறை திருத்தம் கால அட்டவணை 29.10.2024 முதல் தொடங்கப்பட உள்ளது. மேற்படி திருத்தங்களுக்கான விண்ணப்பங்கள் 29.10.2024 முதல் 28.11.2024 வரை வாக்காளர்களிடமிருந்து பெறப்படும். இக்காலக்கட்டத்தில் 18 வயது பூர்த்தியடைந்த இளம் வாக்காளர்கள் (31.12.2006 அன்று வரை பிறந்தவர்கள்)

மற்றும் வாக்காளர்பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களும் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். மேலும், வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளவும், முகவரி மாற்றம் செய்யவும், இடம்பெயர்ந்த, இரட்டை பதிவு வாக்காளர்கள் மற்றும் இறந்த வாக்காளர்கள் பெயர்களை நீக்கம் செய்யவும் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்-2025 -யை பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்கான சிறப்பு முகாம்கள் 16.11.2024( சனிக்கிழமை), 17.11.2024(ஞாயிற்றுக் கிழமை) 23.11.2024( சனிக்கிழமை), மற்றும் 24.11.2024(ஞாயிற்றுக் கிழமை) ஆகிய தேதிகளில் நடைபெறும். வாக்காளர் பதிவு அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்ட மைய அலுவலர்களால் 29.10.2024 முதல் 28.11.2024 வரை விண்ணப்ப படிவங்கள் பெறும் பணி மேற்கொள்ளப்படும். விண்ணப்பங்களின் மீது விசாரணை மேற்கொண்டு முடிவு செய்ய 24.12.2024 இறுதி நாளாகும். இறுதி வாக்காளர் பட்டியல் 06.01.2025 அன்று வெளியிடப்படும்.

29.10.2024 அன்று வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்யப்பட வேண்டிய நபர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு மறுவரிசை எண் கொடுக்கப்படும். மேலும் வீட்டு எண் வாரியாக அந்தந்த குடும்ப உறுப்பினர்களின் பெயர்களும் வரிசை கிரமமாக தொகுக்கப்படும். திருத்தங்கள் மேற்கொள்ளும் வாக்காளர்கள் அவர்களுக்குரிய வாக்குச்சாவடிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலரிடம் விண்ணப்பங்களை அளிக்கலாம். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்குட்பட்ட 1490 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள 693 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் வாக்காளர்களிடம் இருந்து மனுக்கள் பெற்றிட நியமன அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நியமன அலுவலர்களிடம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை விண்ணப்ப படிவங்களை அளித்திடலாம். வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று மனு அளிக்க இயலாதவர்கள் www.voters.eci.gov.in என்ற இணைய தளம் மூலமாகவும் Voter help line என்ற செயலி மூலமாகவும் விண்ணப்பங்களை அளிக்கலாம். மேலும், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களிடம் விபரங்களை சமர்ப்பித்து BLO app மூலமாகவும் பதிவேற்றம் செய்யலாம். வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை இணைக்காத அனைத்து வாக்காளர்களும் தங்களது ஆதார் எண்ணை இணைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பொது மக்கள் தங்களது சந்தேகம் கோரிக்கை தொடர்பாக கட்டணமில்லா தொலைபேசி எண் 1950-ல் தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா அவர்கள், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திரு.கண்ணா கருப்பையா அவர்கள், மாவட் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது (பொ)/ சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.ஜெயா அவர்கள், அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**